விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 18 முஹரம் 5 இதழ் 261
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 3-11-1981

ஜனாதிபதி- கூட்டணி சந்திப்பு

## யாழ்ப்பாணக்குடாநாட்டு சம்பவங்களுக்கும் நஷ்டஈடு!

(கொழும்பு)

யாழ்ப்பாண குடாநாடுமுழுவதும் நடந்த சம்பவங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதென நேற்றிரவு நடந்த ஜனாதிபதி- கூட்டணி தலைவர்கள் உயர்மட்ட பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கொழும்பில் சகலகட்சிகளையும், மதத்தலைவர்களையும் கொண்ட பொதுக்கூட்ட மொன்றை வியாழக்கிழமை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஊர்காவல்படை அமைப்பதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும், இது பற்றி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடந்த தாக்குதல் சம்பவங்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டபோது அங்கு சமூகமளித்திருந்த இராணுவத்தளபதி திஸ்ஸவீரதுங்கா சில சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் அதுபற்றி விசாரணை நடப்பதாகவும் தெரிவித்தார். (ந)

பொறியியல் பிரிவைத் தவிர

# பலாலி முகாமிலுள்ள சகல ராணுவத்தினரும் இடமாற்றம்

## தளபதி வீரதுங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் உள்ள பொறியியல் சேவை பிரிவு தவிர்ந்த ஏனைய சகல பிரிவுகளிலும் உயர் அதிகாரிகள் முதல் வீரர்கள் வரை சகல தரப்பினரும் இன்னும் சில தினங்களில் தென்இலங்கைக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர். இவர்களுக்குப்பதிலாக புதிய வீரர்களை இங்கு கடமையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம் வந்திருந்த இராணுவத் தளபதி திஸ்ஸ. வீரதுங்கா எடுத்த நடவடிக்கையின் பயனாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பலாலி இராணுவ முகாம் இராணுவத்தினரை பகுதியாக தென்பகுதிக்கு அனுப்பும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. (மாவை.நி)

## யாழ்.மாவட்டத்துக்கு 2000 ஆசிரியர்கள் தேவை

(உடுப்பிட்டி)

யாழ் மாவட்டத்தில் சேவையாற்றுவதற்கு 2,000 ஆசிரியர்கள் தேவைப்படுவதாக வடமாநிலக் கல்வி அதிபதி திரு. க. சிவநாதன் கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

யாழ், கல்வித் திணைக்களம் வட்டார ரீதியில் திரட்டிய ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைத் திரட்டிலிருந்து இத்தகவல் கிடைத்துள்ளதாகவும் கல்வி அதிபதி திரு சிவநாதன் தெரிவித்துள்ளார்.

மாதகல் கடற்பிராந்தியம்:

## கடற்படை இராணுவம் தீவிர கண்காணிப்பு

மாவிட்டபுரம்

மாதகல் கடற்பிராந்தியத்தில் அதிகரித்துள்ளதாகக் கூறப்படும் சட்டவிரோதக் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்க கடற்படையும், இராணுவமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன.

மாதகல் கடற்பிராந்தியத்தில் கடந்த சில வாரங்களாக கடத்தல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை மாதகல் கடலில் கடத்தல்

(6ம் பக்கம் பார்க்க)

## அரசதரப்பு சாட்சியங்கள் முடிந்தது

(கொழும்பு)

பொத்துவில் முதலாவது எம். பி. ஜனாப் ஜலால்தீனுக்கு எதிரான விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நேற்று நடைபெற்றது.

அரசாங்க தரப்பு சாட்சியங்கள் நேற்றுடன் முடிவடைந்தன.

புகையிலை கூட்டுத்தாபன இயக்குநர் திரு கே கணேசலிங்கம், அட்டாளைசேனை பள்ளிவாசலை சேர்ந்த ஜனாப் ஆதம்லெப்பை, வர்த்தகர் ஒருவர், விவசாயி ஒருவர், தபாலகத்தோர் அதிபர் ஆகியோர் நேற்று சாட்சியமளித்தனர். (க)

## ஆரியகுளம் சம்பவம், கொலையெனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளத்தடியைச் சேர்ந்த என். பிரேமகாந்தனின் மரணம் கொலையெனத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு ஹோட்டலுக்கு டாக்ஸி ஒன்றில் வந்த கோஷ்டியினாலேயே இவர் வெட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் ஆஸ்பத்திரியில் இவரது மரணவிசாரணை நடைபெற்றது. (மா)

சிங்கை எதிர்கட்சித் தலைவர்

## ஜெயரத்தினம் தெரிவு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் நடைபெற்ற இடைத்தேர்தலொன்றில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. ஜே. பி. ஜெயரத்தினம் ஆளும்கட்சி வேட்பாளரைத் தோற்கடித்துள்ளார்.

இதன் மூலம் சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் 1968ம் ஆண்டின் பின்னர் எதிர்க்கட்சியின் குரல் ஒலிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் லீ குவான் யூவின் ஏககட்சி ஆட்சிமுறைக்கு முடிவுகட்ட வேண்டுமென்பதில் திரு. ஜெயரத்தினம் முனைந்து கட்சிபிரசாரங்களை நடத்தி வந்தார் திரு. ஜெயரத்தினம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரின் ஜனாதிபதி பத

(6-ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கூடுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் மூன்று மாதகால இடைவெளிக்குப் பின்னர் பகிஷ்கரிப்பை கைவிட்டு இன்று மீண்டும் பாராளுமன்றம் செல்லவுள்ள

(6ம் பக்கம் பார்க்க)

கொள்ளை நடந்த வீட்டில்

## வாடகைக்கு இருந்தவர் அறையில் போலித்துவக்கு முகமூடி கிறிஸ்கத்தி

(யாழ்ப்பாணம்)

கொள்ளை நடைபெற்ற வீடொன்றில் வாடகைக்கு குடியிருந்த இளைஞரின் அறையில் போலித்துப்பாக்கி கிறிஸ்கத்திகள், முகமூடி ஆகியவற்றை அங்கு விசாரணைக்கு சென்றபொலிசார் கண்டுபிடித்தனர்.

வடபகுதியில் நடந்த கொள்ளைகளுக்கும் இந்த இளைஞருக்கும் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸ் வட்டாரங்களில எழுந்துள்ளது.

தெல்லிப்பளையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நடராசா என்பவர் தமது வீடடிலுள்ள பூட்டிய அறையொன்றில் சுமார் 20,000ரூபா பெறுமதியான விலை உயர்ந்த பொருள்கள் காணமற்போய்விட்டதாகவும் அத்துடன் தமது வீட்டில் அறையொன்றில் வாடகைக்கு இருந்தவரையும் காணவில்லை என்றும் சுன்னாகம் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார்.

இவர், கொய்யாத்தோட்டத்தைச்சேர்ந்த சிவானந்தன் சிவானந்தன் என்பவருக்கு தமது வீட்டின் ஒரு அறையை வாடகைக்கு கொடுத்துவிட்டு கொழும்பில் வசித்துவந்தாராம், மூன்று மாதங்களுக்குப் பின்னர் தெல்லிப்பழையில் உள்ள தமது வீட்டுக்கு வந்து பார்த்தபொழுது வீட்டில் வாடகைக்கு இருந்தவரைக் காணவில்லையென்றும் அவர் இருந்த அறையும் பூட்டப்பட்டிருந்தது என்றும் தெரிவித்தார்.

பொருட்கள் வைத்த தமது அறையைத் திறந்து பார்த்த பொழுது அங்கு விலையுயர்ந்த பொருட்களைக் காணாது திகிலடைந்தாராம்.

விசாரணைக்குச் சென்ற பொலிசார் வாடகைக்கு இருந்தவரின் அறையைத் திறந்து பார்த்தபொழுது அங்கு போலித்துப்பாக்கி ஒன்றும், இரு கிறிஸ்கத்திகளும், ஒரு முகமூடியும் இருக்கக் கண்டனராம். இவற்றைக் கைப்

(6-ம் பக்கம் பார்க்க)

## இப்படியும் கொள்ளையா?

(சாவகச்சேரி)

செம்பியன்பற்றில் 35,000 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மத்தியாஸ் மரியதாஸ் என்பவர் வீட்டிலேயே இக்கொள்ளை நடந்துள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளை நடந்த வீட்டில் கணவன் மனைவியரில் ஒருவர் செவிப்புலனற்றவரென்பதும்மற்றவர் கண்பார்வையற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மணிவாக்கு

பாலும் நீரும் கலந்தது போன்றது உலகம்; நீ ஒரு அன்னம் போன்று இருந்து, நீரைத் தவிர்த்து விட்டுப் பாலைப் பருகு.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## நாட்டை முன்னேற்ற...

"அபிவிருத்தி ஒன்றே நாட்டின்முன்னேற்றத்துக்கு முதன்மையானது; அந்தக் கொள்கைக்கு ஆதாரமளிக்கும் திட்டங்கள் எவற்றையும் எக்காரணங்கொண்டும் கைவிடமாட்டோம்" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா மிகஉறுதியாக புத்தளத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் முழங்கியிருக்கிறார்.

அரசியல் அவதானிகள் அப்பேச்சில் பொதுத்தேர்தல் மணம் வீசுவதைக் காண்பது இயல்பு. ஒரு புதிய ஆட்சி, தனது ஆரம்ப காலந்தொட்டே கடந்த ஆட்சியைக் குறைகூறுவதும், வசைபாடுவதும் கடந்த 35 வருடங்களாக நாம் கண்ட அனுபவம்.

இந்தப் பயனற்ற அப்பியாசம் காற்றில் ஒவ்வொரு ஆட்சியும் மக்களால் தூக்கி எறியப்படும் நிலைக்கு உதவியதென்று கொள்வது தவறாகாது. ஆக்கபூர்வமான வேலைகளில் தூரப்படும் அரசு தன்னம்பிக்கை கொண்டது. எனவே எதிர்க்கட்சியினரை – கடந்த ஆட்சியினரை அனுவசியமாக, அடிக்கடி தாக்குதல் அர்த்தமற்ற செயலாகும்.

கடந்த ஆட்சிகள் - டட்லியின் ஐ. தே. க. ஆட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி- தோல்வியடைந்ததின் காரணத்தை விளக்கிய ஜனாதிபதி அவ்விரண்டு ஆட்சிகளின் பொதுவான குறையை மக்கள் கவனத்துக்கு முன்வைத்தார்.

அது என்ன? மக்களைத் திருப்திப்படுத்த அரசுதன் முழுவான கொள்கையை மாற்றுவது பெருந் தவறென்பதே! விளக்கமாகக் கூறுவதானால், வாக்காளர்களின் ஆதரவைத் திரட்டி ஆட்சிக்கு வருவதற்காக நாட்டுக்கு தூரநோக்கில் நன்மை பயக்காத எதனையும் செய்வது அரசியல் ஞானமாகாது.

டட்லியின் இலவச அரிசி, திருமாவின் காணி உச்சவரம்பு என்ற 'போலிச்சோஷலிச நாடகங்கள்' அந்த ஆட்சிகளை மண்கவ்வவைத்தன என்பதே ஜனாதிபதி அவர்களின் அரசியல் கண்டுபிடிப்புகளாகும்.

இந்த ஆட்சியின் கடைப் பகுதியில் இந்தக் கடினமான 'பிடியை' ஜனாதிபதி கடைப்பிடிப்பாரானால் அது எதிர்க்கட்சியினரின் சந்தேகங்களுக்கு ஆப்பு வைப்பதாகக் கருதலாம்; மேலும். அபிவிருத்தித் திட்டங்கள் ஆட்சிகால எல்லைக்கு அப்பால் தொடரவேண்டியிருப்பதால், ஆட்சிமாற்றம் அபாயமானதென்பதையும் மக்களுக்கு விளக்குவதாகக் கொள்ளலாம்.

அது என்னவானாலும் நாடு முன்னேற 'அபிவிருத்தி மேடைப் பேச்சிலே' மட்டும் செயற்படும் பண்டமல்ல. மகாவலித்திட்டம், விக்டோரியா, கொத்மலை, மதுருஓயா, - இவையாவும் பிரிட்டிஷ் ராணிக்கும், உலகவங்கிக்கும், 'ஐ. எம். எவ்'வுக்கும் திருப்தியளித்தால் மட்டும் போதா.

இதுகாறும் இவற்றில் கோடிக்கணக்கான [illegible] செலவில் நடைபெற்ற வேலைகள் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவேண்டியது அவசியம்.

உலகவங்கி, ஐ. எம் எவ், மற்றும் வெளிநாட்டு உதவிகள் இலங்கை அரசுக்கு பெருமளவில் கிடைக்கின்றன. இவையாவும் செவ்வனே திட்டமிட்டபடி பயன்படுத்தப்படுகின்றனவா? வேலையில்லா வாலிபர்கள் இத்திட்டங்களால் கணிசமான அளவில் பயனடைகின்றனரா? நெருக்கடிக்கேற்ப ஊழியர்களுக்கு ஊதியம் கிடைக்கின்றதா?

இம் மூன்று வினாக்களுக்கும் நாட்டின் இன்றைய அரசியல் பொருளாதார நிலைமை தக்க விடையளிக்க வேண்டும்.

இலங்கை ஒரு வறியநாடு. பெரும்பான்மையோர் ஏழைகளே. இருந்தும் பட்டினியால் மடியும் எவரும் இங்கில்லை என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். அது உண்மையானாலும், அந்நிலைமை நிரந்தரமானதா?

வறியநாடு முன்னேற வேண்டுமானால் இலங்கை "ஜனநாயக சோஷலிச குடியரசு" தனது பேர்ப் பலகைக்கு ஆதாரமாக சோஷலிசக்கொள்கையை கடைப்பிடிக்க கடமைப்பட்டது. கடந்த ஆட்சியின் சோஷலிச 'போலி' நாடகத்தைக் கேலிபண்ணிய ஜனாதிபதி உண்மை சோஷலிச கொள்கைக்கு அத்திவாரமிடவேண்டும்.

மதசார்பற்ற, மொழி வேறுபாடற்ற, இனத்துரோதமற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்ப இந்த இலட்சியத்தைக் குறிக்கும் Secularism எல்லா அபிவிருத்திட்டங்களுக்கும் அடிப்படைக் கொள்கையாக அமைய வேண்டும்.

இந்த ஒற்றுமை ஏற்பாடு மாநிலசமத்துவ வாழ்வைக் குறிக்கும் சோஷலிசம் ஓரளவிற்காவது நாட்டில் தலைகாட்டும்; இவ்விரண்டும்- Secularism Socialism- இல்லாமல் ஜனநாயகம் என்பது பேச்சில்தான் அமையும்.

வெளிநாட்டு உதவிக்கு எங்கள் நாட்டின் கொள்கைகளை அமைப்பது தேர்தலுக்காக நாட்டின் கொள்கைகளை மாற்றுவதற்கு ஒப்பாகும்.

தமிழ் மக்களுக்கு

# இன்று தேவைப்படுவது சிந்தனைப் புரட்சியே!

பி. எஸ். செட்டியார்

இக்கட்டுரை பொழுது போக்கிற்காக எழுதப்படவில்லை இதில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் எல்லாம் நிஜமானவை. பெயர்கள் மட்டும் கற்பனைப் பெயர்கள். இடம்: பறைச்சேரி வேளி, நாள்: தீபாவளி, காலம்; அருணோதயம். மழை சோனாவாரியாகப் பெய்கிறது. தோளில் மண்வெட்டியுடன் வயல் வரம்பின் மீது ஓர் உருவம் செல்லநடையுடன் அங்குமிங்கும் பார்த்தபடி நடந்து வருகிறது. இடையிடையே நீர் நிரம்பி வழியும் பாத்திகளை வெட்டி தண்ணீரை ஓட விடுகிறது, அரை மணிநேரம் பொறுத்து, தனிக்காட்டு ராஜா மாதிரி குடித்தனம் நடத்தும் இளைப்பாறிய ஆசிரியரின் வீட்டை வந்தடைகிறது. வந்தவருக்கு ஆசிரியர் தேநீர் வழங்குகிறார். சிறிது நேரம் இருவரும் பயிர் பச்சை, வேளாண்மை ஆகியவை பற்றிப் பேசுகிறார்கள். வந்தவர்: சங்கராபரணம். ஆசிரியர்: ஏரம்பர்.

ஏ: தீபாவளியன்று கூடவா வேலை செய்யவேண்டும்?

ச: வீட்டில் சும்மா இருக்க மனம் கேட்கவில்லை; பிள்ளைகளுக்கு உடுபுடவை எடுத்துக் கொடுக்கப் பணம் இல்லை. அவர் அவரவருக்கு அளந்தபடிதான் எதுவும் நடக்கும், நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே, "தொழில் செய்; பலாபலன்களை எதிர்பார்க்காதே!" என்று, அதைத்தான் செய்கிறேன்.

ஏ: உனக்குத் வரவேண்டிய பணத்தை நீ வாங்கி தீபாவளி கொண்டாடுவது தானே!

ச: நான் கேட்டுக் களைச்சுப் போனேன்: நாளைக்கு நாளைக்கு என்று கீ... விடுகிறார்கள் அவர்களுக்கும் என்ன கஷ்டமோ?

ஏ: உன்னுடைய சொந்த வயல்போல் மற்றவர்களுடைய வயல்களைக் கவனிக்கும் உனக்கு ஏன் இந்தக் கதி!

ச: யாருடைய வயலானாலும் சரி பயிர்பச்சை கவனிப்பாரற்று அழிந்து போவதை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு எத்தனையோ எண்ணங்கள் எதிரும் புதிருமாக எழுந்தன. உழுதுண்டு வாழும் விவசாயியே நேர்மையான வழியில் பணம் சம்பாதிப்பவன். மற்றெல்லோரும் சமூகத்தை ஏமாற்றிச் சுரண்டி வாழுபவர்கள் என்று மகாத்மா காந்தி அன்று சொன்னார். அது முக்காலும் உண்மை. வானொலியைக் கேட்டால் பத்திரிகைகளைப் புரட்டினால் கேட்பதெல்லாம் போதனைகள், சாதிப்பவர்களைக் காண்பது முயற்கொம்பு. தத்துவ ஞானம் சாப்பாட்டு மேசைக்கு வரவேண்டும் என்று மேனாட்டு அறிஞர் ஒருவன் சொன்னான்.

நரநாராயணர் பசித்துவாட, நாலு தீர்த்தம் ஆடியென்? நாலு கோடி தெய்வங்களைக் கும்பிட்டுமென்? என்று வீர சந்நியாசி விவேகானந்தர் ஆழ்வுற்றுக்கிடந்த இந்து சமூகத்தைத் தட்டியெழுப்பினார். சிகாகோ பிரசங்கத்தின் பின் விவேகானந்தருக்கு ஏற்பட்ட புகழ், அவர் சென்ற இடமெல்லாம் பஞ்சணை மெத்தையாலான படுக்கைகளை வழங்குவார்களாம். ஆனால் அவற்றில் அவர் படுப்பதில்லை; தரையில் தான் படுப்பார் ஏன் என்று கேட்டால் "எனது தேசத்துப் பாட்டாளிகளும் விவசாயிகளும் உண்ண உணவின்றி, உடுக்கத்துணியின்றித் தரையில் படுத்து உறங்கும் பொழுது நான் எப்படிப் பஞ்சணை மீது படுத்துறங்க முடியும்" என்று பதிலளிப்பாராம். இத்தகைய மனப்பான்மை தமிழ்ச்சமூகத்திற்கு வந்தால்தான் அதற்கு விடிவு ஏற்படும். அரசியல் மேடைப் பேச்சுகளும், ராஜதந்திரமும், ஊருக்கு உபதேசங்களும் வெறும் கண்துடைப்பு; பெயரையும் புகழையும் நாடுபவர்கள் கையாளும் தந்திரங்கள். இவர்கள் தம்மை ஏமாற்றுவதுடன் பிறரையும் ஏமாற்றுகிறார்கள். இவர்களிடமிருந்து தமிழ் இனத்தை ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும்.

### சுயநலம்

தமிழ்இனம் விழித்தெழுகின்றதற்கான அறிகுறிகள் தென்படத்தொடங்கியுள்ளன. பயத்துடனும் பீதியுடனும் நாம் இன்று வாழ்வதற்கு முக்கிய காரணம் நமது சுயநலமே! முல்லைக்குக் கொழுகொம்பு கதந்தன் தேரை ஈந்த பாரிவள்ளலின் இரங்கிய மனத்தை நாம் மறந்துவிட்டோம். தமிழ் இனத்திற்கு இன்று தேவைப்படுவது சிந்தனைப் புரட்சி. இறக்குமதி செய்யப்பட்ட "இஸங்கள்" அல்ல. "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதிகண்ட தமிழ் சமுதாயத்தைப் பற்ற

(6-ம் பக்கம் பார்க்க)

## துணுக்காய்ப் பகுதி அரசினர் வைத்தியசாலை

வவுனிக்குளம் குடியேற்றத் திட்டம் இலங்கையிலுள்ள பாரிய நீர்பாசன குடியேற்றத் திட்டத்தில் ஒன்றாகும். இக் குடியேற்றத்திட்டம் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. யாழ் மாவட்டத்தின் சகல பகுதிகளிலுமிருந்து காணியற்ற மக்கள் இங்கு குடியேறி வசித்துவருகிறார்கள் பாண்டியன் குளம் துணுக்காய் என்னும் இரு உதவிஅரசாங்க அதிபர் பிரிவை உள்ளடக்கி முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் புறமாக அமைந்துள்ளது. இப்பிரதேசம் சுமார் 20,000

### மக்கள் கருத்து

சனத்தொகையை கொண்டுள்ளது இம் மக்களின் சுகாதார தேவைகளை மல்லாவியிலுள்ள அரசினர் வைத்தியசாலையே கவனித்து வருகின்றது. மல்லாவியிலிருந்து முல்லைத்தீவு 40மைல் கிளிநொச்சி 30மைல். இங்குள்ள மக்கள் விவசாய ஏழைமக்களென்றபடியால் கிளிநொச்சிக்கோ, அல்லது முல்லைத்தீவுக்கோ சென்று மருந்து பெற முடியாது. சகல தேவைகளையும் மல்லாவி அரசினர் வைத்தியசாலையிலேயே பெறவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். ஆனால் இந்த மல்லாவி வைத்திய சாலையில் குறைபாடுகளோ பல உண்டு. போதிய மருந்து ஊசி வகைகள் கிடையாது அம்புலன்ஸ் வண்டி மருத்துவ மாதி போதிய மின்சார வசதி, குடிநீர், மலசலகூடவசதி, படுக்கை வசதி இப்படி பலவகையான இன்னல்களையும் இப்பகுதி மக்கள் காலாகாலம் அனுபவித்து வருகிறார்கள், இவைபற்றி இப்பகுதி நலன்விரும்பிகள் பல நடவடிக்கை எடுத்தும் ஒரு பலனும் கிடைக்கவில்லை. காலா காலம்வரும் அரசியல் பிரமுகர்கள் வைத்தியத்துறை உயர் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் மக்களுக்கு நப்பாசை கூறிவிட்டு சென்றார்களேயொழிய செயல்பாட்டில் ஒன்றும் நடைபெறவில்லை. இது மட்டுமா இன்று இந்த ஆஸ்பத்திரியின் வளவு முழுவதும் பற்றைகள் புற்பூண்டுகள் வளர்ந்து காடுபோல் காட்சியளிப்பதுடன் நுளம்புகளின் தொல்லையால் நோயாளிகள் வாட்டில் தங்கி வைத்தியம் செய்ய அஞ்சி வீட்டுக்கு திரும்பி ஓடுகிறார்கள் இங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு மிகவும் தரமற்றதாக வழங்கப்படுவதாகவும் நோயாளிகள் பலர் குறை கொண்டுள்ளனர். சில மருந்துகள், ஊசிகள் இங்கு இல்லை என்று கூறி கிளிநொச்சி முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்குச் சென்று வைத்தியம் செய்யும்படியும் அனுப்புகிறார்கள். மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் வாழும் இம்மக்களை காப்பாற்ற இந்த சுகாதார திணைக்கள அதிகாரிகள் மேலும் அவர்களை வீண் செலவு செய்யும் நிலையை ஏற்படுத்துகிறார்கள். குறிப்பாக இந்தவைத்தியசாலையில் இலஞ்சப்பேயும் தலைவிரித்து ஆடுவதாகவும் நோயாளிகள் பலர் கவலை கொண்டுள்ளனர்.

எனவே இதில் குறிப்பிட்ட பிரச்னைகள் அனைத்தும் இன்று தோன்றியதல்ல. பல ஆண்டு காலமாக வளர்ந்துவரும் பிரச்னையாகும். இவ்விடயம் காலகாலம் மேலிடங்கள் பலவற்றிற்கும் அறிவித்தும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே சுகாதாரத் திணைக்களம், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர், முல்லைத்தீவு அபிவிருத்திச் சபைத்தலைவர், முல்லைத்தீவுப் பாராளுமன்ற உறுப்பினர். போன்றோர் இவ்விடயத்தில் உடனடியாகக் கவனத்திற்கொண்டு இப்பகுதி ஏழை எளிய, விவசாய மக்களின் நல்வாழ்வுக்கு ஆவன செய்வார்களென்று நம்புகிறேன்.

பாதிப்புக்குள்ளான
ஒரு நோயாளி
துணுக்காய்

## வெங்காயமும் விலை குறைப்பும்

உள்ளூர் வெங்காயத்தின் விலையைக் குறைக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளது.

உள்ளூர் வெங்காயத்தின் விலை குறையும் வரையில் வெங்காய இறக்குமதி நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் நல்ல விளைச்சலைத் தந்து கொண்டிருக்கும் ஒரு பொருளின் விலையைக் குறைப்பதற்கு வெளிநாட்டிலிருந்து அதே பொருளை இறக்குமதி செய்வதென்பது உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்சாகத்தைக் குறைத்துவிடும் என்பதை அதிகாரிகள் சிந்திக்காமல் இருப்பது ஆச்சரியமாகவே இருக்கின்றது.

உள்ளூரில் உற்பத்தியாகும் பொருட்களைப் பதுக்கி வைப்பதின் மூலம் சில உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் பெரும் லாபத்தை சம்பாதிக்க முயல்கிறார்கள் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இறக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

# புயல்காற்றில் சிக்கிய 1300 மீனவரைக் காணவில்லை!

புதுடில்லி, நவ. 2

**குஜராத், மகாராஷ்டிர மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 1300 மீனவர்கள் அரபுக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற போது புயல்காற்றில் சிக்கி காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது.**

இம்மீனவர்கள் 215 படகுகளில் மீன்பிடிக்கச் சென்றதாகவும், இதில் 25 படகுகள் மட்டும் கரைக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் மாவட்ட அதிகாரிகளும், பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர்.

மகாராஷ்டிர பிரதேசத்தின் கடற்படையினர் காணாமல் போன மீனவர்களைத் தேடும் தீவிரவேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

சௌராஸ் திரா கரையைச் சாடிய இப் புயல்காற்றினால் குடியிருப்புகள் பல இடிந்தும் சேதமடைந்ததாகவும், இப்புயல்காற்றுக்கு 2 பேர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புயல்காற்று வீசியபோது பம்பாய் துறைமுகத்தில் தரித்து நின்ற சரக்குக் கப்பல் ஒன்று நீரில் மூழ்கியதாகவும், அதிலிருந்த சிப்பந்திகள் எவ்வித உயிராபத்துமின்றி மீட்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இப்புயல்காற்றினால் தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. குஜராத் கிராமமக்கள் அவர்களின் குடியிருப்புகளிலிருந்து அப்புறப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த புயல்காற்று குஜராத் கரையோரத்தைக் கடந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. தற்போது அது பேரார் பந்தரில் மையம் கொண்டு வடதிசைநோக்கி நகர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## இந்திய ஜனாதிபதி கருத்து: காங்கிரஸ் உறுப்பினர் கண்டனம்

புதுடில்லி, நவ. 2

மாநில அரசாங்கங்களுக்குக் கூடுதல் சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும் என்ற இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டியின் கருத்தை ஆளும் காங்கிரஸ்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கப்பனுராவ் கண்டித்துள்ளார்.

தேசத் தலைவர் என்ற முறையில் அவர் இவ்விதக் கருத்தை வெளியிட்டிருக்கக் கூடாதென்று திரு. கப்பனுராவ் தெரிவித்தார்.

மாநிலங்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டால் அது நாட்டில் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்ற கருத்துப்பட இந்திய ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூறப் பட்டது.

மாநிலங்களின் அரசியல், பொருளாதார உரிமைகளை மத்திய அரசாங்கம் வழங்க மறுத்து வருவதாக தெரிந்ததே. (வெ)

## மத்தியகிழக்குப் பிரச்னை
## சவூதியின் சமரச திட்டத்தை நிராகரிக்க வேண்டும்
### அமெரிக்காவிடம் இஸ்ரேல்கோரிக்கை

டெல்அவிவ், நவ. 2

சவூதிஅரேபியாவின் மத்திய கிழக்கு சமரசத்திட்டத்தை நிராகரிக்கும்படி இஸ்ரேல் அமெரிக்காவை வேண்டியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனால்ட் றீகனுக்கு இது தொடர்பாக கடிதமொன்றை இஸ்ரேல் பிரதமமந்திரி திரு. மெனாச்சம் பெகின் அனுப்பி வைத்துள்ளார்.

மத்தியகிழக்குப் பிரச்னைக்குத் தீர்வுகாண 8 அம்சத் திட்டமொன்றை சவூதி அரேபியா வகுத்துள்ளது.

சவூதிஅரேபியாவின் இத்திட்டம் இஸ்ரேலை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையாகுமென்று இஸ்ரேலிய பிரதம மந்திரி திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

அதேவேளை எகிப்தின் புதிய ஜனாதிபதி ஜனாப் ஹொஸ்னி முபாரக் சவூதிஅரேபியாவின் இச் சமரசத்திட்டத்தை வரவேற்றுள்ளார். (வெ)

## எம்ஜிஆர்-இந்திரா சந்திப்பு பற்றி மூப்பனர்

சென்னை, நவ. 3

"தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அண்மையில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்தது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததா என்று என்னால் கூறமுடியாது."

மேற்கண்டவாறு இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கருப்பையா மூப்பனார் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

"திருப்பத்தூர் இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க.வின் ஆதரவைப் பெறுவது பற்றிக் கட்சியின் தலைமைப் பீடமே தீர்மானிக்கவேண்டும்.

"தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியை நான் சந்தித்தது வழமையான சந்திப்புத்தான்." என்றார். (வெ)

## நிக்கலஸ் மன்னர் புனிதராகத் திருநிலை

மாஸ்கோ, நவ. 2

ரஷ்யாவின் கடைசி மன்னனை இரண்டாவது நிக்கலஸ் கிறிஸ்தவ மரபுப்படி புனிதராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அமெரிக்காவில் குடியேறிய ரஷ்ய மரபுவழித் திருச்சபையினரே இரண்டாவது நிக்கலஸ் மன்னரைப் புனிதராகத் திருநிலைப்படுத்தினர். (வெ)

## இந்துக்களின் நாகரிகம் கோயில்களை மையமாகக் கொண்டது

(புலோலி)

"இந்துக்களின் நாகரிகம் கோயில்களை மையமாகக் கொண்டு இயங்குவதனால் இந்துக்கள் தமது நோக்கங்களை உயர்த்தி வளர்க்கக்கூடியதாக இருக்கின்றது அறம், பொருள் இன்பம் வீடு ஆகிய இலட்சியங்கள் வளரும் பொருட்டு இந்துக் கோயில்கள் வான் நோக்கி உயரக்கட்டப்படவேண்டும்"

இவ்வாறு, ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலய வருடாந்த கடல் தீர்த்த உற்சவத்தின்போது சமுத்திரக்கரையில் உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் குறிப்பிட்டார். வல்லிபுரஆழ்வாரின் புனிததீர்த்தத்தைக் காண்பதற்காக கற்கோவளக் கடற்கரையில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் உரையாற்றிய நீதவான் திரு. மகேசன் மேலும் குறிப்பிட்டதாவது: இந்துக்களின் கலை கலாச்சாரம் விஞ்ஞானம், மெய்ஞானம் முதலியவற்றில் உள்ள சகல சாதனைகளும் இறைவன் சந்நிதானத்திலே தெய்வ சித்தாந்தத்தோடு தோன்றி வளர்ந்துவருகின்றது. "திருமால் தமிழ்த்தெய்வம் சாத்தற்கடவுளாகிய அவர் முல்லைநிலத்தெய்வம் என்பதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோம். உலகத்திலே தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் வேளைகளில், தீயோரை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவர் அவதாரமெடுப்பார். இலங்கையிலே திருமால் எழுந்தருளியிருக்கின்ற தலங்களுள் மிகப்பழமை பொருந்தியதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன ஒருமிக்கே பொருந்தியிருப்பதும் ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலயமாகும். "இத்திருக்கோவிலின் தென்றுணைந்தகட்டும் பகுதியில் எதுவிதமுன்னேற்றமுமின்றி இருக்கின்றது. இவ்ஆலய நிர்வாகிகள் ஆலய இராஜகோபுரமொன்று அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர். இத் திருப்பணி வேலைகளை மேற்கொள்வதன் மூலம் இப்பகுதிகள் செழிப்புறவழிபிறக்கும். ஆலயத்தை தமிழ் நாட்டின் ஸ்ரீரங்கம்போல ஆந்திராவின் திருப்பதி போல, வடநாட்டின் துவாரகைபோல பூலோக சொர்க்கமாக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும், என்றார்.

## 520 நெல்மூடைகள் கைப்பற்றப்பட்டன

சென்னை, நவ 2

தஞ்சாவூரில் 520 நெல் மூடைகள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது. இவற்றின் பெறுமதி சுமார் 35,000 ரூபாவென தெரிவிக்கப்பட்டது.

இந்நெல்மூடைகளை ஏற்றிவந்த மூன்று லொறிகளும் பொலிசாரினால் பறிமுதல் செய்யப்பட்டது. (வெ)

## பாரதி நூற்றுண்டுவிழா

சென்னை, நவ. 2

அடுத்தமாதம் 11ம் திகதி முதல் ஒருவாரகாலத்திற்கு பாண்டிச்சேரியில் சுப்பிரமணியபாரதியாரின் நூற்றுண்டுவிழா கொண்டாடப் படவுள்ளது. (வெ)

## விருதுகளும் உதவித் தொகையும்

சென்னை, நவ. 2

தமிழ்நாடு இசையப் பாடு பட்டவர்களின் குடும்பங்களுக்கு விருதுகளும், உதவித் தொகையும் நேற்று முதல் அமைச்சர் திரு. எம். ஜீ ராமச்சந்திரனால் வழங்கப்பட்டது. [வெ]

## சாட்டிலிருந்து வெளியேறுமாறு உத்தரவு

லண்டன், நவ. 2

சாட் நாட்டிலிருந்து லிபியத் துருப்புக்களை வெளியேறுமாறு சாட் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுக் கிளர்ச்சியை அடக்க லிபியா அங்கு தனது 8,000 துருப்புகளை அனுப்பியிருந்தது.

கிளர்ச்சி அடக்கப்பட்ட பின்னரும் லிபியாவின் துருப்புக்கள் அங்கு நிலைகொண்டுள்ளன.

நடுநிலைமைப் பிரிவு ஒன்றைச் சாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு அந்நாட்டின் ஜனாதிபதி ஆபிரிக்க ஒற்றுமை தாபனத்தைக் கேட்டுள்ளார். (வெ)

## தீர்ப்பு ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

பேக்கரிமா வாங்கச் சென்றவரிடமிருந்து பணம், காசோலை, மூக்குக் கண்ணாடி ஆகியவற்றை கொள்ளையடித்த தொடர்பான வழக்கில் எதிரிகளுக்குத் தண்டனை வழங்குவது நவம்பர் 17ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

குரும்பசிட்டியைச் சேர்ந்த நா. மகேந்திரன் என்பவர் பேக்கரிக்கு மா வாங்குவதற்காக 11 ஆயிரத்து 106 ரூபா பணத்துடனும் 956 ரூபா பெறுமதியான காசோலையுடனும் சென்ற சமயம் அவரை வழிமறித்து பணத்தையும், காசோலையையும் கொள்ளையடித்ததுடன் அவரது மூக்குக் கண்ணாடியையும் அபகரித்ததாக குப்பிளானைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதிரமலை, விசுவலிங்கம் சங்கரலிங்கம் ஆகியோர் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டபோது சந்தேகநபர்கள் இருவரும் கொள்ளைப்பொருட்களை வைத்திருந்த குற்றத்தை ஏற்றனர். கொள்ளைக் குற்றத்தை ஏற்கவில்லை. பின்னர் பொலிசார் கொள்ளைக் குற்றத்தை வாபஸ் பெற்றிருந்தனர்.

மல்லாகம் பதில் நீதிபதி திரு ரி தம்பிரத்தினம் கொள்ளைப் பொருட்களை வைத்திருந்ததற்கு தண்டனைவழங்குவதை ஒத்திவைத்திருந்தார் மீண்டும் இவ்வழக்கு நீதிபதி திரு. வி. ஆர். இராஜசிங்கம் முன் எடுக்கப்பட்ட சமயம் எதிரிகளது கையடையாளம் தொடர்பான அறிக்கை வந்துசேரவில்லையென தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தீர்ப்பை நவம்பர் 17ம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைத்த நீதிபதி பதில் நீதிபதியே இச்சம்பவத்தை ஏற்கனவே விசாரித்தமையால் அவரே தீர்ப்பை வழங்குவதுதான் முறையெனக்கூறி அவருக்கு அறிவித்தல் அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

## கிளிநொச்சிப் பகுதியிலுள்ள குழாய்க் கிணறுகளை அமைச்சர் மாவட்ட சபையிடம் கையளிப்பார்

(யாழ்ப்பாணம்)

நீர்வளச் சபைத் தலைவர் திரு. காமினி சுவிவரத்ன கடந்த 29-ம், 30-ம் திகதிகளில் கிளிநொச்சி, வட்டக்கச்சி, முழங்காவில் ஆகிய இடங்களில் வடபிராந்திய நீர்வளச் சபையினால் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறுகளை வடபிராந்திய நீர்வளச்சபை பொறியியலாளர் திரு. த. குணசேகரம், உயர் அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டார்.

இருவைபாதில் உள்ள படித்த பெண்கள் திட்டத்தில் நீர் வளச்சபையினால் இயைக்கப்பட்டுள்ள குழாய் நீர்க்கிணற்றையும் பார்வையிட்டார்.

நிமிடமொன்றுக்கு 150கலன் நீர் வீதம் இக்கிணற்றிலிருந்து நீர் பெறப்படுகிறது. இங்கு மேலும் சில கேணிகள் நீர்வளச் சபையின் தலைவரின் பணிப்பின்பேரில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

திரு. காமினி சுவிவரத்ன விற்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, மாவட்ட சபைத் தலைவர் திரு. சு. நடராசா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம், திட்டமிடல் பணிப்பாளர் திரு. சிவதாசன், அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. நாகராசா. வடபிராந்திய நீர்வளச் சபை பொறியியலாளர் திரு. த. குணசேகரம் ஆகியோருக்கிடையில் கச்சேரியில் இடம் பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் குழாய்க் கிணற்றுக்கு செலவாகும் 35 ஆயிரம் ரூபாவைக் குறைத்து 20 ஆயிரம் ரூபா செலவில் அமைக்க நீர்வளச் சபைத் தலைவர் இணக்கம் தெரிவித்தார்.

வட்டக்கச்சி, திருவையாறு, முழங்காவில் ஆகிய இடங்களில் அமைத்துள்ள குழாய்க் கிணறுகளை மகாவலி, காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திசநாயக்க, யாழ். மாவட்ட சபையிடம் நவம்பர் 28-ல் கையளிக்க உள்ளார். (ஞ)

# வருட இறுதியில் நீண்ட விடுமுறை

## விசேடகுழு சிபார்சு

(கொழும்பு)

பாடசாலைகளுக்கான வருட இறுதி விடுமுறையை 5 வாரமாக அதிகரிக்கவேண்டும் என்று இதுபற்றி ஆராய்ந்த விசேடகுழு கல்வி அமைச்சுக்கு சிபார்சு செய்துள்ளது.

இளைஞர் தொழில் விவகார அமைச்சின் காரியதரிசி திரு. டபிள்யு டி. எஸ். ரட்ணவீர தலைமையிலான எட்டுப்பேர டங்கிய குழுவே மேற்கண்ட சிபார்சைச் செய்துள்ளது.

வருட இறுதி விடுமுறையை கட்டுவதன் சாதக நிலைபற்றி விளக்கியிருக்கும் விசேட குழு, இதனால் மாணவர்களுக்கும், ஆசிரியர்கள் அதிபர்களுக்கும் புதுவருடத் தவணைக்கான ஒழுங்குகளை நிதானமாகவும், நன்கு திட்டமிட்டும் ஆரம்பிக்கக் கூடிய நிலையேற்படுமென அறிவித்துள்ளது.

இச் சிபார்சில் வருட இறுதி விடுமுறை டிசம்பர் மாத முதல் வாரத்தில் வழங்கப்பட வேண்டுமெனவும், பாடசாலைத் தவணைகள் குறைந்தது மூன்று மாத காலத்தைக் கொண்டிருந்தல் வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

## பிரேதம் தோண்டி எடுத்து மறுபரிசோதனை

(சுளிபுரம்)

முருங்கன் பொலிஸ் நிலையத்தில் காலமான பண்ணைத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு வரதராஜா (வயது 38) வின் உடல் புதைகுழியிலிருந்து மீண்டும் எடுக்கப்பட்டுப் பரிசோதனை நடத்தப்பட்டது.

பிரேத பரிசோதனையின் போது பெருந்தொகையான மக்கள் மயானத்தில் கூடியிருந்தனர். பிரேத பரிசோதனையின்பின் பிரேதம் தகனம் செய்யப்பட்டது. (இ)

## திருக்கல்யாணம்

(மல்லாகம்)

மல்லாகம் பழம்பதி திருமுருகமூர்த்தி கோவில் திருக்கல்யாண வைபவம் இன்று நடைபெறவிருக்கிறது.

# தாக்குதலுக்குள்ளான பண்டத்தரிப்பு பேக்கரி

## இராணுவ அதிகாரி நேரில் விபரம் அறிந்தார்

(பண்டத்தரிப்பு)

'டிரக்' ஒன்றில் வந்த கோஷ்டியினரால் திடீர்த்தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட பண்டத்தரிப்பு அபயசிறி பேக்கரியையும், மற்றும் இருகடைகளையும் பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி நேற்றுப் பிற்பகல் நேரில் வந்து பார்வையிட்டு விபரங்களைக்கேட்டறிந்தார்.

இத்தாக்குதல் சம்பவம்பற்றி பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், அபிவிருத்திசபைத் தலைவர் ஆகியோரிடம் புகார் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்றம்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி. கள் பலரும் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள கூட்டணி எம். பிக்கள் தற்போது பாராளுமன்றம் செல்லமுடியாது. இவர்களுக்கு மற்ற எம். பிக்கள் லீவு கோரிப் பெற்றுக் கொடுக்கலாம்.

கூட்டணியின் பொதுச் சபைக்கூட்டத்தில் கூட்டணியின் எம். பிக்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பாராளுமன்றம் செல்வதென்று நேற்றுமுன்தினம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (வெ)

## இன்று...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். ''பாரத நாட்டிலே ஏதாவது ஒரு மாற்றத்தை நீங்கள் ஏற்படுத்த விரும்பினால் அதை ஆத்மீகப் புரட்சிமூலமே சாதிக்கமுடியும்'' என்றார் விவேகானந்தர். மேற்கத்திய 'இஸங்கள்' பொருளாதார அமைப்புகள் மூலம் நமது மக்களின் சிந்தனையோட்டங்களை மாற்ற முடியாது. ஏன், மேற்கு நாட்டினரே இன்று கீழைத்தேய யோக முறைகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும்பின் பற்றத் தொடங்கியுள்ளனர். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு (நெய்க்கு அலைவது போன்று) தமிழ்ச் சமூகம் இன்னமும் வாழவேண்டுமா?

## வெங்காயமும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மதியின் மூலம் இவர்களின் இந்த நோக்கத்தை நிரந்தரமாக ஒழித்து விடமுடியும் என்று கருதமுடியாது. மாறாக இப்பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை உற்சாகமிழக்கச் செய்வதாக மாத்திரமின்றி காலப்போக்கில் இவர்கள் இப்பொருட்களை உற்பத்தி செய்வதையே கைவிட்டுவிட்டுவேறு பொருட்களின் மீது நாட்டத்தைச் செலுத்தும்படியும் செய்துவிடலாம். எனவே உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலையைக்குறைப்பதற்கு இறக்குமதிதான் மார்க்கம் என்ற தவறான போக்கை முதலில் கைவிடுவது அவசியம். மாறாக உற்பத்தியாளர்களுக்கு மேலும் உற்சாகமூட்டும் வகையில் வசதிகளும் சந்தை வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதன்மூலம் உற்பத்தி அதிகரிப்பதோடு பதுக்கி வைக்கப்பட்டவையும் வெளியில்வரும். விலைகள் தாமாகவே குறையும்.

உற்பத்தி அதிகரித்து விலைகள் குறையும் காலங்களில் அப்பொருட்களை அரசநிறுவனங்கள் பெருமளவில் கொள்முதல் செய்து களஞ்சியப் படுத்துவது அவசியம். தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் இவைகளை சந்தைகளுக்கு விடுவிக்கலாம்.

களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளையும், பொருட்கள் குறிப்பிட்ட காலம்வரை பழுதடையாமல் சேமிப்பதற்கான முறைகளையும் கையாள்வதும் அவசியமே. உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகளை நிரந்தரமாக அல்லது நீண்டகாலத்து ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருக்க இதுவே சிறந்த வழி.

--பேனா

# செட்டிகுளம் கொலைவழக்கு: இரண்டு எதிரிகள் விடுதலை

(வவனியா)

செட்டிக்குளம் பாலசேகரம் கொலை வழக்கில் 3ம், 4ம் எதிரிகளை போதிய சாட்சியமில்லாத காரணத்தினால் வவனியா மாவட்ட நீதிபதி திரு. பெட்ரிக் பெர்னாண்டோ விடுதலை செய்தார்.

செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் எஸ். கணேஷ் காரியாலய ஊழியரான முகம்மட் முசம்மில் ஆகிய இருவருமே மேற்படி விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 4ம் திகதி சுதந்திர தினத்தன்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட கோபால் பாலசேகரம் அல்லது பாலன் என்பவரை அடித்துக் கொன்றதாக கிராம சேவையாளர் தணிகாசலம் லிங்கதர் சிங்கராஜா உதவி அரசாங்க அதிபர் எஸ். கணேஷ் காரியாலய ஊழியரான முகம்மட் முசம்மில் ஆகிய நால்வருக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில் போதிய சாட்சியமில்லாத காரணத்தினால் 3ம், 4ம் எதிரிகளை நீதிபதி விடுதலை செய்தார், 1ம் 2ம் எதிரிகளுக்கான தீர்ப்பை இம் மாதம் 25ம் திகதிக்கு நீதிபதி திரு. பெர்னாண்டோ ஒத்திவைத்தார்.

சட்டத்தரணி திரு. ஆர். வி. விக்னேஸ்வராசாவின் உதவியுடன் 1ம் எதிரியின் சார்பில் திரு பி சிவலோகநாதனும் 2ம் 3ம் 4ம்எதிரிகளின் சார்பில் திரு. ஆர். ஈ. தம்பிரத்தினமும் ஆஜரானார்கள்.

## மாதகல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படகு ஒன்றைக் கைப்பற்ற கடற்படையினர் தீவிர முயற்சி மேற்கொண்டும் கடத்தல்காரர்கள் பொருட்களை கடலில் வீசிவிட்டு தலைமறைவாகி விட்டார்களாம். அச்சமயம் அங்கு சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றவாள் ஒன்று கடற்படையினரைக்கண்டு ஓட்டம் பிடிக்கவே அதனை துரத்திச் சென்ற கடற்படையினர் மாதகல் சிவன் கோவிலடியில் வைத்து வானை கைப்பற்றி அதிலிருந்த இருவரையும் கைது செய்தார்களாம்.

மாதகலிலுள்ள வீடொன்றிலிருந்து பெருந்தொகையான கோப்பிக்கொட்டையை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றையடுத்து மாதகல் கடற்பிராந்தியத்தை கடற்படையினரும் இராணுவத்தினரும் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். கள்ளக்கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சிங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லியை பொறுப்பேற்பதற்காக திரு. தேவன் நாயர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச்செய்தமையால் அன்சன் தொகுதியில் இடம்பெற்ற இடைத்தேர்தலிலேயே திரு. ஜெயரத்தினம் வெற்றி பெற்றுள்ளார்.

## கொள்ளை நடந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய பொலிசார் இவை கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.

## இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். வங்கிச்செயலகம் தொடர்பான நஷ்டஈடு குறித்து விசாரணைகள் மீண்டும் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ் செயலகத்தில் நஷ்டஈட்டு குழுத்தலைவர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையிலான குழு இவ்விசாரணைகளை மேற்கொள்ளும். இம் மாதம் 11ம் திகதிவரை விசாரணைகள் நடைபெறும். (மா)


ஹோம்பினுன்ஸ்லிமிட்டெட்
82, கன்னதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.
போன்; 8310
மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
உல்லாச பஸ் சேவை
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
3-11-81ம்திகதிசெவ்வாய்க்கிழமைதொடக்கம்
டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பினுன்ஸ் லிமிட்
82, கன்னதிட்டிறோட், யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 8310)
(2) யாழ் மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல 6. நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7596
புறப்படும் நேரம் மாலை 6-00 மணி
செல்லும் தினங்கள்
செவ்வாய், வியாழன், ஞாயிறு
கொழும்பிலிருந்து திரும்பும் தினங்கள்
திங்கள், புதன், வெள்ளி
ஹோம் பினுன்ஸ்
லிமிட்டெட்
463, காலி றோட், கொழும்பு.
போன்: 89190



உடனடியாக அவசர வேலைகள் முடிப்பதற்கு
ஆட்கள் தேவை
அனுபவமுள்ள வேக்ஸ்சொப் பி(f)ற்றர், வெல்டர், ரிங்கர்
WORKSHOP FITTER, WELDER & TINKER
போன்றோர்
உடனடியாகத் தேவை
பத்து நாட்கள் வரை மட்டும் வேலை செய்வதற்கு;
தற்காலிகமாக ஆட்கள் தேவை
சம்பளம் நாளொன்றிற்கு 30/- இருந்து 60/- ரூபா வரை அனுபவத்திற்கேற்றபடி வழங்கப்படும்.
உடன் நேரில் வரவும்.
சேவிகிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி. (1358)


## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை கந்தசாமி

வெள்ளாந்தெருச்சந்தி தேனீர்ச்சாலை உரிமையாளரும், 93, மானிப்பாய்வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தாமோதரம்பிள்ளை கந்தசாமி 1-11-81ல் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், சோமசுந்தரம் (கிளிநொச்சி மகாவித்தியாலயம்) சண்முகநாதன் (அபுடாபி), காலஞ் சென்ற இரங்கநாதன் (நாதன்ஸ் வேக் சொப், யாழ்ப்பாணம்), யோகநாதன் (நாதன்ஸ் வேக் சொப், யாழ்ப்பாணம்) செல்லையா ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியலெட்சுமி, சுமித்திரா, புவனேஸ்வரி, மகாலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனஞ் செய்வதற்காக விக்னேஸ்வரிறி மயானத்திற்கு 3-11-81 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். 1359

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 3-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81. P. O. Box 49: Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.